# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8110270

1. District மாவட்டம் : Theni District PS: காவல்நிலையம் V&AC, Theni Year: ஆண்டு 2021 FIR No.: மு.த.அ. எண் 02/2021 Date: நாள் 15.09.2021

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018. Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 13.09.2021 1245 Hrs Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15.09.2021 Time : நேரம் 14.30 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம் 16.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written Petition

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் About 30 kms Southwest
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Office of the District Education Officer, Uthamapalayam, Theni District.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. Sishor Kumar (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் A. Moses
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1982 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் –
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் (g) Address : முகவரி D.No.5, Ward-1, Ambedkar Colony, Anaimalaiyanpatti, Uthamapalayam Taluk, Theni District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr. Arunkumar, Junior Assistant, Office of the District Education Officer, Uthamapalayam, Theni District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   - Nil -

GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

- Computer typed Separate sheet enclosed -

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 15/09/2021 | [signature] 15/09/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
15.09.2021 17.05 hrs
Through HC 430 G. Ramakrishnan

Name: பெயர் ஜெயப்பிரியா
Rank: நிலை Inspector No. எண் .........
VXAC, Theni.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p.2

12. F.I.R. contents (Attach separate sheet if required):

முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தேனி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.**02/2021**-ன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.

**சமர்ப்பிக்கப்படுகிறது:** தேனி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 15.09.2021-ம் தேதி 14.30 மணிக்கு காவல் நிலையத்தில் இருந்தபோது தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, ஆனைமலையன்பட்டி, க.எண்.5, வார்டு எண்-1-ல் வசிக்கும் மோசஸ் என்பவரது மகன் மோ.கிஷோர் குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரின்பேரில் கீழ்க்கண்ட முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுகிறது. மேற்கண்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- நான் மேற்கண்ட முகவரியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 10.01.2011-ஆம் தேதி உடற்கல்வி ஆசிரியராக நேரடி நியமனம் செய்யப்பட்டு அன்று முதல் மதுரை மாவட்டம், சேடபட்டி ஒன்றியம், முத்துநாகையாபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் உடற்கல்வி ஆசிரியராக 31.05.2013-ஆம் தேதி வரை பணியாற்றினேன். பின்னர் அங்கிருந்து பணிமாறுதலில் கடந்த 01.06.2013-ஆம் தேதி முதல் தேனி மாவட்டம், கம்பம், ஆலமரத்தெருவிலுள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளியில் உடற்கல்வி ஆசிரியராக தொடர்ந்து பணியாற்றி வருகிறேன். நான் பணிக்குச் சேர்ந்து பத்து ஆண்டுகள் முடிவடைந்த நிலையில், தேர்வுநிலை உடற்கல்வி ஆசிரியராக ஆணை பெறுவதற்காக தேனி மாவட்டம், கம்பம் வட்டாரக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் கடந்த 03.01.2021-ஆம் தேதியன்று விண்ணப்பித்தேன். அவர்களும் எனது விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து அந்த மாதத்திலேயே தேனி மாவட்டம், உத்தமபாளையம், மாவட்டக் கல்வி அலுவலகத்திற்கு எனது கோப்பினை மேலனுப்பி வைத்தனர். கடந்த 2021 ஏப்ரல் மாதத்தில் என்னுடைய கோப்பில் மூன்று குறைகள் இருப்பதாகக் கூறி எனது கோப்பினை கம்பம் வட்டாரக் கல்வி அலுவலர் அலுவலகத்திற்கு திருப்பி அனுப்பி விட்டனர். அதன்பிறகு மேற்படி மூன்று குறைகளையும் நிவர்த்தி செய்து மீண்டும் எனது கோப்பினை கம்பம் வட்டாரக் கல்வி அலுவலர் அலுவலகத்திலிருந்து உத்தமபாளையம், மாவட்டக்கல்வி அலுவலகத்திற்கு கடந்த 2021 ஜூன் மாதம் கடைசி வாரத்தில் அனுப்பி வைத்தனர். அதன்பிறகும் எனது விண்ணப்பத்தின் மீது தகுந்த உத்தரவு ஏதும் பிறப்பிக்காததால் கம்பம் வட்டாரக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியாற்றும் திரு.நாகேந்திரன் என்பவரிடம் அது பற்றி கேட்டேன். அதற்கு அவர் உத்தமபாளையம், மாவட்டக்கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியாற்றும் திரு.அருண்குமாரிடம் எனது கோப்பு இருப்பதாகவும் அங்கு சென்று அவரை பார்க்கும் படியும் கூறினார். நானும் கடந்த 13.09.2021 அன்று பிற்பகல் சுமார் 12.45 மணிக்கு உத்தமபாளையம், மாவட்டக்கல்வி அலுவலகத்திற்குச் சென்று இளநிலை உதவியாளர் திரு.அருண்குமாரை சந்தித்து கடந்த ஒன்பது மாதங்களாக எனது கோப்பு உங்கள் அலுவலகத்தில் நிலுவையில் உள்ளதென்றும், ஆனால் எனக்கு பின் விண்ணப்பித்த பல ஆசிரியர்களுக்கு

ஏற்கனவே தகுந்த உத்தரவு வழங்கப்பட்டுவிட்டது என்றும், எனக்கு தெரிந்து எனது கோப்பில் வேறு குறைபாடுகள் ஏதும் இல்லையென்றும் கூறி உடனே எனது கோப்பில் தகுந்த ஆணை பிறப்பிப்பதற்கு ஏற்பாடு செய்யும்படி சொன்னேன். அதற்கு அவர், கோப்பினை தயார் செய்து வைத்திருப்பதாகவும், தகுந்த ஆணை பெறுவதற்கு லஞ்சமாக ரூ.1500/- வேண்டும் என்றும், பணம் எனக்கு கொடுத்தால்தான் உங்களது கோப்பினை நகர்த்த முடியும் என்றும் கறாராக கூறி விட்டார். மேலும் உத்தமபாளையம் மாவட்டக்கல்வி அலுவலர் சென்னை மீட்டிங்கிற்கு சென்றுள்ளதாகவும், புதன் கிழமை வந்து விடுவார் என்றும் அவ்வாறு புதன்கிழமை வரவில்லையெனின் வியாழன் அன்று உறுதியாக மாவட்டக்கல்வி அலுவலர் வந்து விடுவார் என்றும், அன்றே கோப்பு தயாராகி விடும் என்றும், ஆகையால் அவர் கேட்ட பணத்துடன் வியாழக்கிழமை 16.09.2021-ஆம் தேதி காலை 10.00 மணிக்கு மேல் அலுவலகத்தில் வந்து அவரை சந்திக்கச் சொல்லி அருண்குமார் என்னிடம் கூறினார். நானும் வீட்டிற்கு சென்று யோசித்துப் பார்த்ததில் இளநிலை உதவியாளர் திரு.அருண்குமாருக்கு லஞ்சம் கொடுத்து வேலையை முடிப்பதற்கு என் மனம் விரும்பவில்லை. ஆகையால் என்னுடைய கோப்பின் மீது தகுந்த உத்தரவு பெற்றுத்தருவதற்கு லஞ்சம் கேட்கும் உத்தமபாளையம் மாவட்டக்கல்வி அலுவலக இளநிலை உதவியாளர் திரு.அருண்குமார் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு இந்த புகார் மனுவை கொடுக்கிறேன். திரு.அருண்குமார் என்னிடம் லஞ்சமாகக் கேட்ட பணம் ரூ.1500/-ஐ நான் கொண்டு வந்துள்ளேன். அவர் மீது ஊழல் தடுப்புச்சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd/- XXXXX (மோ.சிஷோர் குமார், 15.09.2021)

Sir, Received this complaint on 15.09.2021 at 14.30 hrs. A confidential verification was conducted in respect of the complaint as well as the complainant through sources and found to be genuine and good respectively. The reputation of the accused was also verified and found to be bad. Since, a prima facie case is made out in the complaint and after getting oral permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti-Corruption, Chennai, a case in Theni, Vigilance and Anti-Corruption Crime No.02/2021, u/s 7 of the P.C.Act 1988 as amended by the P.C.(Amendment) Act, 2018 was registered on 15.09.2021 at 16.00 hrs. Sd/- (ச.ஜெயப்பிரியா, காவல் ஆய்வாளர், ஊ.த.க.பிரிவு, தேனி).

The original FIR along with the original complaint of Tr.M.Sishor Kumar, S/o. Moses, Theni District is sent to the Chief Judicial Magistrate/ Special Judge for PC Act Cases, Theni District and copies are sent to the superior officers concerned.

C. Jayapriya 15/09/2021
(C.JAYAPRIYA)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Theni District.